உ

திருச்சிற்றம்பலம்.

# சிறப்புப்பாயிரம்.

இஃது

திருக்கைலாயபரம்பரைத்

திருவாவடுதுறை ஆதீனத்து

அடியார்குழாத்தொருவரும்

இத்தலாசிரியபீடத்தில்

கல்விபயின்றவருமாகிய

## ஆறுமுகச்சுவாமிகள்

இயற்றிய

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

சீர்பூத்த பாலாற்றின் புனல்பரந்து காலாற்றிற் சேறலா
லே, பார்பூத்த குடிதழைப்பப் பலவளனு மாங்காங்குப் பர
வவாக்கிக்,—கூர்பூத்த வறிவான்மிக் கோர்பலரைத் தழுவி
யௌவை கூறுங் கூற்றுற, நார்பூத்த நாடோறும்பார் நிறு
விவருந் தொண்டைவள நாட்டின்மாதோ. (க)

மன்னியசீர் மறையொலியுந்தமிழ்வேதமறையொலியும் வயங்கு சீர்த்தி, துன்னியவா சகவொலியுந் தொண்டர்களிசெய் யரவொலியுந் துவன்றியெங்கு, முன்னியமற் றவர்ந்து வேளாண்குலத்தோ ருபகரிக்கு மொலியு மேன்மேன், மின்னியகா லந்தொறும்விண் ணடுசெவி டுறச்செய்குன்றை வியனூர்தன்னில். (௨)

நிலந்தழைப்ப வெண்ணீற்று நெறிதழைப்ப வஞ்செழுத்து நிலவி மேன்மேல், வலந்தழைப்ப வுயர்சைவம் வலிதழைப்ப மறுசமையம் வறப்பத்தொண்டர் புலந்தழைப்ப வடியேம்விண் டலந்தழைப்ப நலந்தழைப்பப் பொலிவேளாளர், குலந்தழைப்பச் சேவையர்கள் குடிதழைப்பத் தமிழ்தழைப்பக் குறிப்பாருய்ய. (௩)

உலகுய்யத் திருத்தில்லை நடநவில்வார் திருவருளா லொருவர்வந்து, கலைபுகழ்ப் பாலறு வாயர்முனந் தோன்றியருட் காரணார்த்தம், விலகிலருண் மொழித்தேவ னெனும்பிள்ளைத் திருநாமம் விளங்கிப் பின்பு, சுலவுசேக் கிழார்மரபு விளங்க விற்சேக் கிழா ரெனும்பேர் துலங்கப் பூண்டு. (௪)

காற்றுபகை யனபாய னமாத்தியரா யதின்முதன்மை கதிர்ப்பப் பெற்றுத், தோற்றுபுறச் சமையமெலா மொருங்கவிய வென்றருளித் தொழுவார்க் கன்பு,தேற்றுதில்லைநடராசர் முதலருளத் திருத்தொண்டர் திருப்புராணம், மாற்றுமல மருந்தெனவாய் மலர்ந்தருளும் பெரும்புகழார் மலர்ப்பூந் தாளில். (௫)

தேக்குபுகழ்ச் சோணாட்டிற் றிரிசிரா மலையின் மிகு திரு
வோங்குக், ஆக்குபுகழ் வேளாளர் குலாம்புதியிற் சிதம்பர
வேலெங்கப் பன்னு ளாக்குபுக ழுனைத்தோன்றிப் பலகலை
யுமொருங்கேயாய்ந் தான்றோர் பல்லோர், வீக்குபுகழ்பரந்த
கைலாயபரம் பரையாகி விளங்காநின்ற. (௬)

எங்கடுறை சைவையடைத்தம் பலவாண தேவனடியினி
றுசூட்டத், தங்கமுடி வாய்ந்துசிவ ஞானகலை யகங்கைவெல்
லித் தோற்றத் தாய்ந்து, கங்ககதரித் தருள்சடையோன்
பலதலத்து மான்மியந்தன் கருத்தினோர்ந்து, சங்கையிற்செந்
தமிழின்மொழி பெயர்த்தியற்றுங் கட்டபாட்டிற் றலைமையா
னோன். (௭)

மின்னுமர னடியன்றிக் கனவினும்வே றெண்ணுதவிர
தம்பூண்டோர், மின்னுமெய்போ லியர்பலருக் கிலக்கியமு மி
லக்கணமு மெளிதுசெய்தோ, னன்னவன்பேர் மீனாட்சி சுந்
தரநா வலவனெனை வாய்ந்தோரியாரும், பன்னுபுகழ் பூதல
முமீதலமும் பாதலமும் பரவநின்றோன். (௮)

மற்றவர்மான் மியப்பெருமை யருமையுட னுளத்துணர்
ந்து மகிழ்பெ ரன்பாற், கற்றபய னின்றடைந்தோ மிம்மைய
றுமைப்பயனுங் கதிர்க்குமீதென், றுற்றருமை பெருமைதொ
ண்டர் புராணவிரா சியமுழுது மொருங்கே தோன்றச், சொ
ற்றபிள்ளைத் தமிழெனவோர் பாமாலைத் தொடுத்தனன்மெ
ய்த் துறவோர் போற்ற. (௯)

### சிறப்புப்பாயிரம்.

வென்றபுக ழினையார்மான் மியத்தமிழால் விரித்தருளு
மேன்மையாள, னொன்றுபுகழ் மரபினுமா ரிதுநயத்த வுரிய
னெனவுவந்து சான்றோர், நன்றுமொழி துறைசையிற் சுப்பிர
மணிய குருமணியுண் ணயந்து நன்றென், றென்றுமுடி யாடி
யமெடொறுந் துளக்கமவை வியக்கவாங் கெற்றினனே. (௪௦)

## சிறப்புப்பாயிரம் முற்றியது.

---

## ஆண்பாற் பிள்ளைக்கவி.

சாற்றரிய காப்புச்செங் கீரைதால் சப்பாணி
மாற்றரிய முத்தமே வாரானை—போற்றரிய
வம்புலியே சிற்றிலே யாய்ந்த சிறுபறையே
யம்புசிறு தேரோடும் பத்து.

## ஆண்பாற் பிள்ளைக்கவியின் பருவம் பத்துக்கும் விவரம்.

| | | | |
|---|---|---|---|
| காப்பு ... | ...இரண்டா மாதம் | வருகை | ...பனிரண்டாமாதம் |
| *செங்கீரை | ...ஐந்தா மாதம் | அம்புலி | ...பதினொரு மாதம் |
| தால் | ...ஏழா மாதம் | சிறுபறை | ...இரண்டாம் வருஷம் |
| சப்பாணி | ...ஒன்பதா மாதம் | சிற்றில் | ...மூன்றாம் வருஷம் |
| முத்தம் | ...பத்தா மாதம் | சிறுதேருருட்டல் | ...நான்காம் வருஷம் |

---

* செங்கீரை-ஒருகாலைமடக்கி யொருகாலை நீட்டி யிருகைகளை யும் நிலத்திலூன்றிக்கொண்டு தலை நிமிர்ந்து முகமசைய ஆடுதல்.

உ

திருச்சிற்றம்பலம்.

குன்றத்தூர்

# சேக்கிழார் சுவாமிகள்

# பிள்ளைத்தமிழ்.

## காப்பு.

மாமேவு வான்பிறை முடிப்பிறை யிரண்டென்ன வாய்க்கடைத் தோற்றியவிரு, மருப்பிரண் டென்னவங் கைக்கோடு மொன்றென்ன மார்பின்முத் தார மென்னப், — பாமேவு பெருநா பக்கமென வரைசூழ் படாமெனத் தாளின் முத்தம், பதித்தகழ லெனவிரவு மேலோங்கு பேருருப் பண்ணவனை யஞ்சலிப்பாம், — மாமேவு ஞானசபை யிறைவர் தம்மேனியி லணங்குற வொழப்புரசெலா, மென்னுமறை யாதியாக் கொண்டவ ருயிர்க்கருளு மியல்பனைத் துந் தெரித்து, — நாமேவு மம்முதலொ டொன்றவினை யுருபுதொக நான்கனடி யாதிசெய்து, காற்சிறி ஞெனெறி விளக்கியாளிர் சேக்கிழார் நற்றமிழ்க் கவி தழையவே. (க)

## குருவணக்கமும், அவையடக்கமும்.

ஓங்குகைலாயபரம்பரைநந்தியடிகட் குறுமரபெட்டாவது*பிற்றோன்றலாயெங்க, ளுயர்திருவாவடுதுறைச் சுப்பிர

* பிற்றோன்றல் திருநந்திதேவர், சனற்குமாரதேவர், சத்தியஞானதரிசனிகள், பரஞ்சோதிமஹா முனிவர், மெய்கண்ட சிவாசாரியர், அருணந்தி சிவாசாரியர், மறைஞான சிவாசாரியர், உமாபதி சிவாசாரியர்.

மணியகுரவற் குற்றபத்தொன்பதாவது *முற்றோன்றலாய்ப்
பொலிந்து,—தேங்குசிவப் பிரகாச முதலியவாய் மலர்ந்து
திகழு மாபதிசிவனேகுன்றையுற மேவித்,திருந்துமோர் வளங்
கொண்டு பெருமையின் மேலாகிச் சிறத்தலாற் செம்மேனிக்
குமரவே ளொத்தும்,—பாங்குடை றத்துதிக் கையொடோர்
கோட்டத்தனைய பயிற்சி யினக்குமர வேடிருத் தமையனொத்
தும், பரவுசேக் கிழானெனும்பேர் பரித்தலி னக்கணேசப் ப
ண்ணவனையினி துயிர்த்ததிருத் தாதையொத்தும்,—வீங்குபு
கழ் படைத்தவருண் மொழித்தேவன் புராணம் விரித்துரைத்
தா னவனடிதாழ்ந் தென்னறிவிற்கேற்ப, மெய்ப்பிள்ளைத் தமி
ழெனவொன் றுரைப்ப லஃதறிவான் மிக்கவர்தங்குழாத்திலு
க்கு மிக்கநகை தருமே. (உ)

## காப்புப்பருவம்.

கார்கொண்ட சோலைசூழாரூரரோரரைக் காணம்பியாரூ
ரர்முக், காலனைக் காலாக முடிவுசெய் தருண்மாக் கவித்தி
ளைசயின் வீற்றிருக்கு,—மேர்கொண்ட தில்லைமூவாயிரர்முன்
வழுவரு மெழுவருந் தழுவருமெம, திதையர்ந்த ழால்கொண்

* முற்றோன்றல் அருணமச்சிவாயர், சித்தர் சிவப்பிரகாசர், நமசிவாயமூர்த்திகள், மறைஞான சுவாமிகள், அம்பலவாணதேசிகர், உருத்திரகோடி சுவாமிகள், வேலப்பதேசிகர், முற்குமாரசுவாமி தேசிகர், பிற்குமாரசுவாமி தேசிகர், மாசிலாமணி தேசிகர், இராமலிங்க தேசிகர், முன்வேலப்பதேசிகர், பின்வேலப்பதேசிகர், திருச்சிற்றம்பல தேசிகர், அம்பலவாணதேசிகர், சுப்பிரமணியதேசிகர், அம்பலவாண தேசிகர், சுப்பிரமணியதேசிகர்.

சிறந்திடச் செய்தவரை யெப்போது மேத்தெடுப்பாம்,—
பான்கொண்ட தொண்டர்வா லாறுசொல் புராணமும் பலவ
ருளாலமைந்த, படிதெரித் திடவுல கெலாமெனுஞ் சுருதி
காப் பண்ணுமீற்றும் பொருந்திப்,—பேர்கொண்ட சைவ
ரி பாடையுறி வரியசம் பிரதாய முதலியாவும, பிறங்கத் தெ
ரித்தெம்மையாண்ட குன்றத்தூர்ப்பிரானைப் புரக்கவென்றே.

இலைமலி யெனுங்கலியு ளெழுபுவன மும்பரசு மெழுமு
னிவரேத்த வமர்வா, ரெழுபுவி வையமிசை யெழுகதிரும்
வட்குமணி யெழுவுருவு முட்குமொளிசான்,— மலைமலி புய
த்தெறி பத்தர்முத லெழுபவமு மாய்த்தவிழ லெழுவோரை
யும், வாயார வாழ்த்தித் துதித்தவ ரடிக்கமலமலர்முடிக்கணி
யாக்குவாங்,—கலைமலி பெரும்புலவர் கைகுவிக்கக்கலைக் கன்
னி நின்றேவல் கேட்கக், கனகசபையார்முத லளித்தருளவ
வாமகத் துவமடைந்திருந்து,—மலைமலி சுணங்களைப் பே
ணன் றுணாத் தருளி யாமபெருக்கத்து வேண்டுமான்றபணி
வெனுமொழிப் பொருட்டேற்று குன்றைநக ராளியைக் காக்க
வென்றே. (௨)

மும்மைமறையும்பாவு மும்மையுலகும்புகழு மும்மை
யாப் பகரமாதி, மும்மையுயிர்குறிநெடி றனித்துமதசவ்வூர்
த்து முதலமையு சாமமுற்றார்,—செம்மைபெறுமும்மையாம்
வருணைத்துதித்துச் சிறந்தோங்கு மூர்த்தியார்முற், செறியுமி
ருமும்மையார் செம்பொற்பதாம்புயஞ் சென்னிவைத் தேத்
தெடுப்பா,—நம்மையருள் சிவபாத விரதயருளத்துவகை நண்
ணவொண் பொருளாதலா, ஞடுமுழவாரவல மியைதலாலி

யாவொரு நாவலர்பிரானென்னலால்,- வெம்மைதவிர்புகலி
யார் முதன்மூவரும்புகலும் வேதத்தமிழ்க்க ணுள்ள, மெய்
மையைவிரித்துத் தெரித்தருள்செய்குன்றையூர் வேந்தைப்
புரக்கவென்றே. (௯)

திருநின்றசெய்புள்புக ணீற்றறையுளருகந்தர் சிந்தை
வெந்திடவமர்ந்துஞ், செறிதுயர்க்கடன்மறக் கல்லொடவரா
றலொர் நினைக்கடற் கண்மிதந்துங்,—கருநின்றகண்டரருள்
வெளிசெய்நாவரசர்முற் கருதுபுக ழெழுவோரையுங், கருத்
திடையருத்தியி னிருத்திமற்றவர்பதங் காதலித் தாக்குதிப்
பார்,—தருநின்றசெங்கைத்தலங்குவித்திடுமுனைந் தையலொ
ருபாகர்தொண்டர், சரித்திரமனைத்துமொரு வாதுறநிரம்பத்
தவாமனை வரைக்குவிக்க,— வருநின்றசீர்கொள்புலி யூர்க்
கோட்ட மேயதற் கொப்பவுலகேத்தநாளு, மேராங்குபுலியூர்க்
கோட்டமேய குன்றத்தூரொருத்தனைக் காக்கவென்றே.(௰)

வம்பறு யாப்புரவில் வப்பறு மூலெயொரு மடக்கொடி
யைவேட்ட லின்றி. வண்பிரமசரியநிலை வைகுநாளெயொரு
மடப்பாவை யைப்பிறப்பித்,—தும்பறு வுந்திற லரிக்குநீள
போலெழுந் துவலைகயார்க் கும்பிறப்பித், துலாயவர்மு னை
வரைவெலஅவர் பொற்பாத மலருச்சி வைத்தேத் தெடுப்
பா,—மப்பறு வாழிமுழு துண்டதிரு முனிவிரித் தருளிய
தமிழ்க் காக்கயா, வருண்மூவ ருண்மறைப் பொருடெரியு
முன்னொருவ ருண்மறைப்பொருள் விளக்கு,—நம்பறுவித்
தியா ரணியமுனி வரனுள நயப்பயாப் புறவிரித்த, நாவலர்

[illegible]ானைத் திருக்குன்றை யருண்மொழி நலத்தனைக் காக்க வென்றே. (௫)

வார்கொண்ட வனமுலை பெனுங்கவியுளுயர்வையாபன் பிளர்க டலைவணக்கி, வாயார வாழ்த்தித் தியானித் திடச் சங்க மங்கைவரு சாக்கியர்முத,— லேர்கொண்ட புகழ் கொடவை வேலவையு மடையுற்று மெய்தாதுமாகின்ற, வினியருக ரடையுமேற் றொளிர்கின்றவறுவலாயு மிறுவலாயு மேத் தெடுப்பாங்,— கார்கொண்ட வடணசிந் தாமணியை வளவர்கோன் கங்குல்பக லாராய்தரக், கண்டொழித் தாவ திது வேயென்று தொண்டர்தம கத்துவங்கருதவுய்த் துப்,— பார்கொண்ட மன்னரல் லவைநீக்கி நல்லவை பரித்திடச் செயலமைச்சர், பண்பென றெரித்தகுன் றத்தூருறைந்த வெம் பரமனைக் காக்கவென்றே. (௬)

பொய்யடிமை யில்லாத செய்யுளி னிலக்கியப் புகலிலக் கணமெய்ஞ் ஞானப், போதநா லாதியா யாவுமறி றபவுண ர்பு புரகரனை யேதுதித்து,— மெய்யடிமை வாய்ந்தசங் கப் புலவர்முதலாய வித்தக வொழுக்க மிக்கார், விண்மருவு வா ர்பரவு மெண்மருமெம் மிதயம் விடாதமர வேத்தெடுப்பா ஞ்,— செய்யமல ராதன மிருந்துபல சாதியுஞ் சேரப் படை த்த தேவுஞ், செப்பரிய வாயவவ் வச்சாதிருமிகுணைஞ் செய் கைகுடி கொளுமி லியல்பு,— வெய்யமொழி யுணவுமுன் விரித்தெலா மறியவவர் மெய்யறிஞ ரெனவிளக்கி, மேம்ப ட்ட வேளாண் குலக்கதி ரெனுங்குன்றை விமலனைக் காக்க வென்றே. (௭)

கறைக்கண்ட யாப்பினைந் ததிகாரிமேலொரதி காரிமலை மங்கை யொருபாற், கலந்திருக் கவுநிருவி காரிநிர கங்காரிகாரியா காரிநாளு,—மறைக்கண்ட ருஞ்சோதி யோங்காரி யருளைய வாங்காரி முதலமர்ந்த, வண்கணம் புல்லர்முற் சைவரா மைவரு மகிழ்ச்சியுற வேத்தெடுப்பாம்,—பிறைக்கண்டமிதுபகலின் முகிலுறைவ ததிசயப் பெற்றியென் றுடுவார்கண், பெட்பப் பெருக்கெடுத் துவருபா லாற்றலை பிறங்குவளை விசலைத்த,—துறைக்கண்ட நிமிர்கந்தி யஞ்சோலை தவழ்தருந் தொண்டைவள நாட்டு நாட்டுக், தொல்புகழ்க் குன்றைவரு பாலறா வாயர்முற் றோன்றலைக் காக்கவென்றே. (அ)

கடல்சூழ்ந்த யாப்பமர றஞ்சூழ்ந்த செஞ்சக் கழற்சிங்க மன்னன் மன்னிக், கழியா மடங்கழி யிடங்கழியருட்கே கருத்துணை செருத்துணையரில்,—விடல்சூழ்ந்த சிந்தையொடிகழ்த்துணைபெறுதற விளங்கும்புகழ்த் துணைவய, வேட்புலியெனுந்திருக் கோட்புலியிவ்வை வணாயு மேன்மேலுமேத்தெடுப்பா,—மடல்சூழ்ந்த தொண்டர்வர லாற்றுவிரி யுலகெலாமறியத் தெருட்டு குரவிற், கமையப் புனைந்ததுகொல் சாதியடை யாளங்கொ லமையுமெது சொலினு மென்னி,— மடல்சூழ்ந்த செங்குவளை மாலையணிதிண் டோள் வலத்தனை நிலத்தனை வரும், வாயார வாழ்த்துகுன்றத் தாருதித்த பெருவள்ளலைக் காக்கவென்றே. (௯)

பத்தரா யென்றெடுத் தருடிருக் கவியிலிரு பைங்கோதையாளை வேட்ட, பான்மைக் கிணங்கவோ ரிருபுதல்வி

யார்தமைப் பயவாமலே பயந்த,—சுத்தராய் வன்றொண்டரின்றொண்டர் தழுவித் துதிக்கவைத் தவர்களாய, தொகையுளா ரொன்னுமெழு வகையுள்ளார் பொற்பதந் தொழுதேத் தெடுத்தல் செய்வா,—நித்தராய் பன்றுலொட நவில்வா ருவக்கும் வெண் ணீற்றொளிநிலா வொளியென, நினைந்தணைந் தாங்குக்கு வளைபொலி யவின்றே னிரம்பயுண வளியடைந்தாங்,—கத்தராய் கண்மணித் தொடைபொலி தரப்பொலியு மம்புயத் தவணைநம்பு, மளவா வளந்துன்று குன்றைநகர் மேயவரு ளாளியைக் காக்க வென்றே. (க0)

மன்னிய திருப்பாட்டி லாகார முதலிய மறந்திராப் பகன்றியன் றுரையைத்து வாழ்வார்க ளேறுக்காத வண்ண நவமணி யாலயம் புரிந்து,—மின்னிய சடைப்பரமர் பிறதனி மறுத்தடை விதங்கண் டுலந்தபூசல், வித்தகர்முன் மேயவெழுமொரு மெய்மிதயத்து மேவலைத் தேத்தெடுப்பாம்,— பன்னியதொ கையும்வகையு முதலாதலான் முதற் பகர்சைவ ரோயருளினார், பாவுவிரி யிறுதியா தலினிறுதி யரோனைப் படுமசவரோயருளினார்,—துன்னிய பொருத்தமிது வென்றுலக மகிழ்தாத் தொண்டர்வா லாறனைத்துந், தூவாய் மலர்ந்தவருண் மொழிவானை வனையான்றதோன்றலைக் காக்கவென்றே. (கக)

காப்புப்பருவம் முற்றிற்று.

---

## செங்கீரைப்பருவம்

ஒண்கொண்ட பொதுவகத் துலகெலா முய்யநா றுலகெலா மென்ற தீஞ்சொ, லுலந்தே டெழுத்தாணி கொண்

டெழு திரண்டுலகை யும்புவி யுறப்பதித்து,—வண்கொண்டு
வொருதாண் மடித்தூன்றி யொருதாள் வயங்குறவெடுத் தூ
ன்றியொரண், வாய்கவிச் சுவையொழுக் கழிவிப்பதெனவமுத
மாட்சிமை யொழுக்கெடுப்ப,—வெண்கொண்ட நெற்றிநீ றி
ளிலவு மொண்கா திருங்குழை யிளங்கதிரும்விட், டெறிப்ப
விள முறுவலுந் தோன்றமலர் திருமுக மெடுத்துவா னளவு
நோச்சித்,—திண்கொண்ட குன்றையம் பதியருண் மொழி
த்தேவ செங்கீரை யாடியருளே, திருத்தொண்டை நன்னாட்டு
வேளாளர் குலதிலக செங்கீரை யாடியருளே. (க)

பொருவரிய தொண்டர்கள் புராணத்து ளிறையருட்
பொலிவா ளிரம்புசொற்கள், போற்றிடு விருப்பநீர் நம்மை
மழுவாக்கிவாய் புகல்குதலை மழலையென்ன,—மருவுமொழியா
சையுற் றீர்பய னுறுதென்ன வள்ளான் மறுத்துரைத்தால்,
வார்த்தைப் பயன்கொள வேலைத்தக்கசான்றுநீ வாய்மலர் புரா
ணநின்று,—மொருவரிய நாஞ்செப்ப லுற்றபொரு ளென்று
கவி யோதவேண்டுவ தினியெவ, னுனதுசொற் பயனுணர்க
விலமென்னின் மழலை யவ்வப்பதும்பொய்ம்மையாமே,—திரு
வமிகு குன்றையம் பதியருண் மொழித்தேவ செங்கீரை யா
டியருளே, திருத்தொண்டை நன்னாட்டு வேளாளர் குலதி
லக செங்கீரை யாடியருளே. (உ)

ஒப்பரிய தொண்டர்தம் மருமையும் பெருமையு முலக்
குமவ ரவர்செய்கையு, முவமை யில்லாச்செய்கை நுட்பமுந்
திட்பமும் மும்பர் கோனரு டட்பமுந்,—தப்பரிய செந்தமிழ்
த்தொடை நடையு மடையுந் தவாப்பொரு ளணிச் சிறப்புந்,

தமிழ்மறை யடங்குபல மந்தணமும் வெள்ளிடைக்.* தவிரு
ம்வெற்பென விளங்க,— வெப்பரிய முழுமதிக் குடைநிழற்
றனிபாயன் மேயவவை யகமுழ்ந்து, வியந்துமெய்ப் பாட்டி
னொடு பாராட்டிமகிழ மேன் மேல்விரித் தருளியபிரான்,—
செப்பரிய குன்றையம் பதியருண் மொழித்தேவ செங்கீரை
யாடியருளே, திருத்தொண்டை நன்னாட்டு வேளாளர் குல
திலக செங்கீரை யாடியருளே. (௫)

காயவொளி யிருட்புபொன் மாளிகைத் தில்லைச் சபாந
டனாதர் பெத்தான் சாம்பானை யுய்த்தவம் திருவாண இக்
கையாற் றருமுத்தி யடைவிபென்றெ,—பாயதிரு முகமு
ய்த் திடப்பெற்ற கைலாய வம்பாய் பரமாயி லளவா, வருமு
ருவ மாயவ தரித்திட்ட மெய்ஞ்ஞான வப்புதவி மாபதிசி
வ,—னோயமிக விம்மைக்கு மறுமைக்கு மாதார நீயதி தெ
ன் றுணர்ந்து, நினதுவர லாறருமை பாராட்டி யருள்செய
நிரம்புமான் பியமடைந்தாய்,—நேயநிகழ் குன்றையம் பதி
யருண் மொழித்தேவ செங்கீரை யாடியருளே, திருத்தொ
ண்டை நன்னாட்டு வேளாளர் குலதிலக செங்கீரை யாடியரு
ளே. (௬)

பொருந்துமா யிரமுகக் கங்கைகமர பிறைகதிர்கள் பொலி
யுமா யிரமுள்ளவன், போற்றேன்றி யாயிர மறைக்குமெட்
டாச்சென்னி பொற்பவா யிரமுடையகோன்,—மருந்துநே ர
ருள்பெற்ற மைக்கேற்ப வாயிரம் வயங்குபொற் கானிதீஇய,

---

* தவிர்தல்—நீக்குதல்.

மண்டப மிவர்ந்தா யிரந்தொண்டர் வரலாறு வாய்மலர்ந்
தவளா விவா,—யிருந்துசூழ் கொழுவுண்டு புண்டரீ கத்தின்
வாயினையபுல வறத்துவட்டி, யிருஞ்சங்க னம்பே டெணுத்த
மூழ்வி நாணுமுற் றியல்பேடு மற்றென்றுனுஞ்,—செருந்துசூ
ழ் குன்றையம் பதியருண் மொழித்தேவ செங்கீரை யாடிய
ருளே, திருத்தொண்டை நன்னாட்டு வேளாளர் குலதிலக
செங்கீரை யாடியருளே. (௫)

வேறு.

தோம்பல வுடையேயம் பிறவியை யஞ்சேஞ் சுடர்நின்
சினகரமுற்,றுகே மெழுகே மிரவும் பகலுந் துதியோ மாயி
டினு,—நாம்பல தேவரை நண்ணே மெண்ணே நயவேம் வீய
வேமா, னாண்மலர் பலகொடுநின் னடியேத்தி நயத்தலே மே
ற்கொண்டு,—கூம்பல்செய் கையே மெய்யே மிதனிற் கோ
மா னீயருளுங், கூலியெ வன்கொ லவாயது நல்கிற் குலாவு
மூவப்புறுவே,—மாம்பல வாவுதன் மேயபுயாசல வாடுக செ
ங்கீரை, யாரரு ளாகர சேவையர் காவல வாடுகசெங்கீரை.()

புண்ணிய முதலே பொங்கொளி மணியே பொய்யாப்
பெருவாழ்வே, பொள்ளலின் முத்தே கள்ளமில் வித்தே பு
ளையில் சுவைப்பாகே, தண்ணிய வமுதே மண்ணியன் மதியே
தமிழ்நா வலரேறே, சத்துவ நிதியே பொத்திய மலநோய்
சாடு பெரும்பகையே,—யெண்ணிய வன்பரு ளத்தமுதூற
லினிக்கு நறுந்தேனே, யென்றும் பத்திரசங்கனி கனியே
யென்று னினுமெங்கட்,— கண்ணிய பொருளே யாப்பவர்

தெருமேள யாடுக செங்கீரை, யாரருளாகர சேவையர் காவல
வாடுக செங்கீரை. (எ)

சூழிய மேவிய கொண்டை விளங்கத் தொட்டுக் கட்டி
யபொற், சுட்டி யிலங்கப் புண்டரநீறு துதைந்து நிலாக்கா
ல,—வாழிய கனிவாயூறற் றேறன் மார்பின் வழிந்தோட
வடிகா திற்புனை குழையிற் செவ்விய மணியின வெயில்வீச—
வீழிய வாவிய வாயின முறுவல் விளங்க வளைப்பொன் றொன்,
மின்னுக் காலப் பேரொழி னோக்குநர் விழிகள் விருந்து செ
ய,—வாழிய வன்பரகத் தமர்செஞ் சுடராடுக செங்கீரை.
யாரருளாகர சேவையர் காவல வாடுக செங்கீரை. (அ)

இவர்சரி யையரிவர் கிரியையர் யோகத் தினரிவரிவர்
ஞான, வியல்பின ரிவரி லறத்துவழாதவ ரிவர்துற வறநின்று
ர்.—கவர்மன மொழியியர் பிரமசாரியர் இல்லை கைக்கொண்டோ
ரிவரோ, கண்குளிர் வேடம் பொருளென நம்பினர் கருதருபி
வராதித்,—தவர்நிலை யுணரா வருளினனிறைவன் றக்கனவு
லகறியச், சாற்றின னலனவ னேயுலகறிய சாற்றிய படியெ
ன்ன,—வவரவர் செயன்முத லருளிய வல்லவ வாடுக செங்
கீரை, யாரருளாகர சேவையர் காவல வாடுக செங்கீரை, ()

நந்தி வரைத்தலை யொருமுனி சூடிய நயக்கப் பொழிந்தி
ம்பா, னதியா யங்கம் கோடுபுகூபநயங்கிள ரோரிகுள,—மூங்
கி யெழுங்கா லோடை தடாக முதற்பல வுந்நிறையா, முழு
த்தசு வைப்பா லாக்குபு பின்னு மூரிக் கடல்புக்குப்,—புந்தி
யவாவ நிரம்பவின் மாயோன் புரிகண் டுயிலு மிடம், புகலிது

வோவரு வோவெனவாயப் பொலிதண் டகொட,— வந்தி
மதிச்சடை யண்ணற் கினியவ வாடுக செங்கீரை, யாரூ
ராகர மேசவையர் காவல வாடுக செங்கீரை. "(கo)

"செங்கீரைப்பருவம் முற்றிற்று.

---

## தாலப்பருவம்.

வெண்ணைத்தாழி வயிறுளைந்து விற்று விற்றுக் கருவுயி
ர்த்த, வெண்ணைத் திலத்தை யரித்தெடுத்துவெள் வாய்க்கள
மர் கலைக்குவிக்க,— வண்ணக் குவைமென் றுவமிக்கும்வாயோ
திமதிர் குடைந் தெழுந்து, மற்றைக் குவியன்மே லிவர்ந்து
மருவிமுதிரா வெயிற் காயக்,— கண்ணைக் குறவண் டெழுதரு
மக் களமர்மாளை முட்டையினைக், கதிர் நித்திலமென் றறக்கு
வித்தோங் கடையே மயங்கியெனை நாளும்,— தண்ணந்துறை
சேர் குன்றத்தூர்த் தலைவா தாலேலோ தாலேலோ, சகலாகம
பண்டிதத் தெய்வச் சைவா தாலேலோ தாலேலோ. (க)

கண்பா லெவருமுறத்தரிக்கு நலங்கூர் நீற்றின் வெள்
ளொளியா, ஞாலெவரு மாமுழுக்க நாளுஞ்செயவாம் பே
ரொளியா,— லெண்பாற் புலவ ரமுதுகொளற் கெக்க விடத்
துநெருங்குதலா, லேர்சாலரம்பை யெழுதலினு லியனுகே
சன் வைகுதலாற்,— கண்பாற் கரிதோய் திருமடந்தை காமு
ற்றிடலான் மாளிகைமேற், கருமால் கிடந்து கண்டுயிலுங்
காட்சித்திறனுற் பொங்கியெழும்,— தண்பாற் கடனேர் குன்
றத்தூர்த் தலைவா தாலேலோ தாலேலோ, சகலாகம பண்டித
தெய்வச் சைவா தாலேலோ தாலேலோ. (உ)

முத்தவெழுமாற் றுயர்பொன்னுன் முழுச்செம்மணியான்
மாளிகையு, முதுகுளிகையுந் தெற்றிகளுமுகப்பும்பிறவும
மைதலின்,—விந்தகவும் பொன்னகரந் திறுமிக்கிமைத்தல்
விதியுளத்தி, லெண்ணரியாடூஉ மகடூஉவா மெல்லாவுயிரும்
விழி யிமைத்த,—னந்தவருட் சம்பந்தர் மணநண்ணியவர்க்
குங் கதிகொடுத்த, நலம்போலிதுசார் புவியகத்து நகர்க்கெ
லாஞ் செய்தன வென்று,—சந்தந் தவாசொல் குன்றத்தூர்
த் தலைவா தாலோ தாலேலோ, சகலாகம பண்டிததெய்வச்
சைவா தாலோ தாலேலோ. (௮)

முரிவில் வயிரங் கால்யாத்த முழுமாளிகை பாற்கடல்
கடையா, முன்னந் திருமா லுருவொத்து முயங்குமென
வுமதற் கருகே,—பிரிவில் கருநீலங் குயிற்று பெருமாளிகை
யக்கடல் கடைந்த, பின்ன ரன்ன லுருவொத்துப் பிறங்கு
மெனவு மதற் கருகே,—யெரிவிலிடு செந்துகிர்மாடமெயில்
சூழ்காஞ்சி யடைந்தன்ன, னெய்து முருவொத் தகைதென்று
மெக்கா வலருங்கொண்டாடச்,—சரிவில்வளஞ்சால்குன்றத்
தூர்த் தலைவா தாலோ தாலேலோ,சகலாகம பண்டித தெய்வ
ச் சைவா தாலோ தாலேலோ, (௯)

சேறுமணக்கு மடங்களெலாந் தூய்மை மணக்குஞ் சிந்
தை யெலாஞ், சுவணை மணக்கு மாடையெலாந் தொங்கன்
மணக்குந் தோள்களெலாஞ்,—சேறு மணக்குங் கழனியெ
லாஞ் செல்வமணக்கு மாடமெலாந், தென்றன் மணக்கு மே
டையெலாந் தெய்வமணக்குஞ்செய்யுளெலா,—நீறுமணக்கு.
நெற்றியெலா நெய்யேமணக்குங் கறிகளெலா, நெருப்புமணா

க்கும் குண்டமெலா நேயமணக்கும் வீதியெலாஞ்,—சாறுமு
ணக்கும் குன்றத்தூர்த் தலைவா தாலோ தாலேலோ, சகலா
கம பண்டித தெய்வச் சைவா தாலோ தாலேலோ. (ரு)

## வேறு.

தங்கமிருந்த வருந்தவமேவிய தோலா நாத்திரண
ராமாக்கிளியரு டொல்காப் பியமே தோன்றுமிலக்கணமாப்
பங்கமி லாச்சமை யாதியடைந்து பராஞ்சிவ சின்னமுறும்
ராகமரூஉம்பக் குலமோ கேட்கப் படுமதி காரிகளா
வங்க மெடுத்துழ றும்பமொழிக்கின் படைவது வேயரு
வ ற்புதமேவிய தொண்டர் புராணம தருள்கரு ணைக்கடலே
சங்கமரீஇயமர் குன்றைத் திருமுனி தாலோ தாலேலோ
சைவப் பயிர்தழை யத்தழையும்புய றாலோ தாலேலோ. (சு)

அடியார் பெருமையு மருமையுநாளு மறியம் புலவாணை
யவர்வரலாறு விரித்துரை செய்பவ ராமென வுட்கருதிச்
சடியார் மற்றவ ரன்பத்தனையுங் கண்கான் படிசெய்து
காமருமுதலு மெடுத்தரு ளினரிக் கடல்சூழ் புவியிடையிப்
படியார் பெற்றார் தமிழ்மான் மியமெப்பாடைக ளுக்குளதிப்
பாக்கியநந்தவ மென்றுபல் லோரும் பகரப்படுபவநீக்
கடியார் தடிசூழ் குன்றைத் திருமுனி தாலோ தாலேலோ
சைவப் பயிர்தழையத்தழை யும்புய றாலோ தாலேலோ. (எ)

பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவ
லவ, பயனில தாகுஞ் சிந்தாமணிவழி படர்த லெனப்போ
தித்;—துத்திச் சுமைபொருதோள்வைத்திடுபுலுயர்த்தோன்

மனமடியா, ருஞ்செயலுடைப் புரிமதி வலவையொல் லாவருகந் தர்திற,—முத்திக் திறமல வென்றளை விலர்பான் முற்றிச் சி வமடைய, முயல்செயல் வலவு வயற்கண் மடைச்செறி முத் தமனைத்தினையுங்,—கத்திப் புனல்பாய் குன்றைத் திருமுனி தாலேலோ தாலேலோ, சைவப் பயிர்தழை யத்தழைப்புப ருமேலோ தாலேலோ. (அ)

ஏற்றுத் தலைபொரு மவுலிபுனைந்தா லென்னைச் சொல் லணிபெயான், றெய்திப் பொலியப் பொருளணியாயின வெவ் விடமும்விரிப்ப,—வீற்றுக் கிடையிறை பட்டனவகைமைய வி னம்பு வணப்பிமெறடு மெய்யமுதப்பொரு ளாதியமுன்றும் வே ண்டுமிடத்தெய்த,—மாற்றப்புனைவப்பொருள் கோண்மு த லனைத்து மற்றுள்ளனவு, மமையாத் தொண்டர் புராணகவின் றவ வடருபு குழுமகபாகங்,—தாற்றுக் கதலிக் குன்றைத் தி ருமுனி தாலேலோ தாலேலோ, சைவப் பயிர்தழை யத்தழைப் பப்ப ருமேலோ தாலேலோ. (௯)

மண்டலை வேலைப் புவியிற் பத்திசெய் மார்க்க மறிந்தவ ரார், வண்சுவையமுத வொழுகுமென வார்த்தை வழங்கத் தெரிகுநரார்,—கொண்டலை நேர்பக ரோகருகூற்றங் குறித்து ய்த் திடவலரியார், கொற்றக் கைகலைக் கணநாதர்களொடுகூடு புமகிழ்பவரார்,—விண்டலை யாரும் பெறலரு மின்பம் விரா வுந்திறவினரார், விமலாசியவ தாரஞ்செய்யா விடினெம மே யவனைப்,—தண்டலைசூழுங் குன்றைத் திருமுனி தாலேலோ தாலேலோ, சைவப் பயிர்தழை யத்தழைப்புப ருமேலோ தாலேலோ. (௰)

தாலப்பருவம் முற்றிற்று.

## சப்பாணிப்பருவம்.

விழையறமுதற்கல்வி யறியுநுண்ணறிவுமம் மேதைதக்கி
ணங்கொழுக்கு,மெய்யவிவை யுடையார்த் தழீஇயவர்சொலினி
தேற்குபேம்பாடு மாறுகருதா,—மழைநிகர்கொடைத்திறனு
நலிவளூஉ திளியீட்டு மாண்புமாற் றலனாயஞ்சா, வன்மை
யுமிடங்கால முதலறித லுங்கடிய மாற்றநவி லாதகுணமு,—
முழையரும் விருப்பமறி யாதடக் குதலுநல னேங்குகாட்சி
க்கெளிமையு, முடையளிவ னுலகுவத் தற்குரிய னென்றுள்
ந் துன்னியிறை புனையமணிக,— டழையுமுடி தொட்டுக்
கொடுத்தருண் மலர்க்கைகொடு சப்பாணி கொட்டி யருளே,
தண்டமிழ்க் குன்றையாங் குன்றுதித் தெழுபானு சப்பாணி
கொட்டியருளே. (க)

கார்க்கோல மாலோன் புரந்தருள்வ னெனுமொழிமு த
மனுவினை வேளாண்மையைக், கருதவழி தானங்கொள் கு
லமே யெனப்பனூல் கற்றவரியம்ப மறையோர்,—போர்க்
கோலமன்னரொட் டியர்மூவர் புறமெனப் புகன்மூவர் பசிவரு
த்தும், போக்கின மெனக்களிப் புறவிலே கருமது புகன்றும
கிழ்தலைசிறப்ப,—வார்க்கோல முலைமங்கை பங்கர்தளி முற்ப
லவும வல்பூசை யொடுசிறப்பு, மாறாது பொலியமழை வள
னுஞ் சிறப்பவளா வாப்பெருமை வாய்ந்தமேழி,—தார்க்கோ
லொடுங் கொடுஞ் செங்கைத் தலங்கொண்டோர் சப்பாணி
கொட்டி யருளே, தண்டமிழ்க் குன்றையாங் குன்றுதித்தெ
ழுபானு சப்பாணி கொட்டி யருளே. (உ)

மேவாத பாயுடுத் தலைமயிர் பறித்துழல் வோரசமண யப்பாழ்ங்குழி, வீழ்ந்தவர்மு னச்சமைய கண்டனம் பேசி யத்தீ விடவாய்ந்து திருவாயினின்,—றோவாத பிரதாப மொரு கதி ரெனத்தோன்றி யுள்ளகோ கனகமெல்லா, மேறாமலர்த் திடவவைகை யொப்பாயி னேமென் றுறப்பொலிக றேறாப ன்று,—ராவாத மியமெனவ பயநல்கி யுண்மைநிலை யருளரு ங்கை நின்றெழுபுக, ழாலோ னெனத்தோன்றி யெல்லாங் [illegible]வித்ததென் றன்றோ ரெடுத்துரைக்குந்,—தாவாத வொளி [illegible]ர்நி னங்கைத் தலங்கொண்டொர் சப்பாணி கொட்டி யருளே, தண்டமிழ்க் குன்றையாங் குன்றுதித் தெழுபானு சப்பாணி கொட்டி யருளே. (௯)

தருமமலர் கொய்துநீ ராடிநீ றிட்டுநனி தூயநன் னிருக் தாரேனோ, துலங்குமொரு குறியிலா வாகனமெ னுதலோடு தோன்றிடச் செய்வதன்று,—பெருமவடி யெங்களைப் புரவென்று தாழ்பவர் பெருஞ்செல்வ மெய்திவையய, பிறங்குநாராயணவு பநிடத முறைத்தபடி பெற்றருடி யிவர் வணக்கங்,— கருமமுத லெம்மலமு நீத்தின்பமெய்தக் கடைக்கணித் திடுதியென்று, கனிந்துவேண் டுவதன்று சிறுவருந் தமுமிலாக் காரியம வாவி நின்றேக்,—தருமசின கரமாங் கரங்குவித்தை யவொரு சப்பாணி கொட்டி யருளே, தண்டமிழ்க்குன்றை யாங் குன்றுதித் தெழுபானு சப்பாணி கொட்டியருளே. (௰)

எண்ணியவை யெண்ணியபடிக்கடி யவர்க்கருளு மீசன்றுளா லருளுரு, வினைசமயத் தொடக்கெல்லா மொழித்தனமெனக் கைதட்டுதலு மோவாத்,—திண்ணிய மலச்செருக்

கெல்லாமொழித்தனந் தீர்த்ததவ் வாதையென்று, செப்பிற் கைதட்டுதலு மிந்திரன் மலர்க்கணுன் றேந்துமா யவன் வாழ்க்கையு,—நண்ணிய வெழுங்கருத் துந்தவிர்க் தனமென்று காடிக்கை தட்டுதலுமோர், நவிலநம் பரமகுரு சாமியென் றியாவருநயக்கவவ தாரஞ் செய்தாய்,—தண்ணிய மலர்க்கைத் தலங்குவித் தையவொரு சப்பாணி கொட்டியருளே, தண்டமிழ்க் குன்றையாங் குன்றுதித் தெழுபானு சப்பாணி கொட்டியருளே. (௭)

வேறு.

வம்பிட் டொளிர்முலை மாதுமைகாண மணிப்பொது நடனஞ்செய், வார்முனை மனைநந் துருகிட கிற்றன் மகிழ்தவர் முதனல்க,—நம்பிட் டருமறை யோர்கை குவித்து நயந்துவியந்துடனே, நறுவிரைநல்கி யலங்கல் புனைந்து நகும்பரி வட்டமெடுக்,—தம்பிட் டொளிர்சடை யவரே யிவரென் றறையுமறத் தெளியா, யாத்திடு முன்னோர் நன்னர்விழைந்திய தன்றுடு கொள்ளு கெனக்,—கும்பிட் டேற்ற திருக்கை குவித்துக் கொட்டுக சப்பாணி, கொற்றச் சேவையர் காவல நாவல கொட்டுக சப்பாணி. (௮)

உண்ட லுடுத்தன் மணத்தன் முதற்பல வுவிணுபு நன்னயமா, ருத்தம வென்றடை யாதுல ரெண்ண மொருங்கு தெரிந்தனையார்,—தண்ட விலாமகிழ் பூப்ப மலர்க்கைத் தலம்விரியாதுகுவி, தருமொர் பழக்கமுன் னுள்ளதியாங்கள் செய்தவம் வழிதாங் கொல்லோ,—கண்டல் செறிந்த கருங்கடல் வண்ணன் கவிகெழு பாற்கடன் மேற், கண்டுயில் வதுபோர

வெண்சுதை தீற்றிய காமரு மாளிகைமேற்,—கொண்ட ரு. றங்குங் குன்றத்தூரன் கொட்டுக சப்பாணி, கொற்றச் சே வையர் காவல நாவல் கொட்டுக சப்பாணி, (௭)

படியிடை யொருமை திரவரு ணிணைபுரி பர்வல னைர் திணையும், பகுத்தொரு முப்பொரு ளோடும் விரித்துப் பா ஞ்சத் தெய்வங்,—கடிதலில் கினகர முள்ளனவோதக் கற் த்தவ நெஞ்சங், கனியக் கனியக் கண்ணீர்வாரக் கவிபா டியவி றைவ,—வொடிவரி தாமிரு பன்னிருகோட்டத் துள்ளொரு கோட்டமலா, தொருகோட் டமுமுற லில்லாய்நல்லா புல வா வள்ளைமைப்பல்,—குடிக ணெருங்குங் குன்றத்தூரன் கொ ட்டுக சப்பாணி, கொற்றச் சேவையர் காவலநாவல கொட் டுக சப்பாணி, (௮)

நாடிய விரிநூல் சொற்றிடுதிறனு னன் னூலாசிரிய
வருபா சுரமுத லுரைசெய்தலினு னவிலுரை யாசிரிய
னீடிய பரசமை யக்குழி வீழ்ந்தவர் நீப்பப் போதனைசெய்
நிலையாற்போத காசிரியனிவை நிகழ்தொறு நிகழ்தோறு
மாடிய ஞானத் திறனுறலான்ஞா னசிரியனு நீயென்
றான்றோர் பலரும் புகழப்படுபவ வகில மெலாஞ்சென்று
கூடிய புகழ்சால் குன்றத்தூரன் கொட்டுக சப்பாணி
கொற்றச் சேவையர் காவலநாவல கொட்டுக சப்பாணி. (௯)

நிலவிய நாகேசுரரினி தமர்தலி னிகழ்நா கேசுரமாய்.
நீண்மணிமாட நிலாவலி னிந்திர நீல பருப்பதமாய்க்
கலவிய செம்மணி மாடத் தாலொளி காலர தனகிரியாய்க்

உஉ சேக்[illegible]

கெல்லா [illegible]

கை [illegible]

பு [illegible]

[illegible] (௪0)

[illegible]

[illegible]

[illegible] வாதிராஸ்வர்களுந்
[illegible] திராவிநவல் வினைத்தொடர்பா
[illegible] மெய்ப்போயுங் கிழிறிந்து
[illegible] பொருங்கடைய
[illegible] சொலையாரொன்பதின்மர்
[illegible] பதின்மர் மேலுமுளர் சரித்திரமாங்
[illegible] பொழிமதுரக் கனிவாய் முத்தந் தருகவே
[illegible] குன்றையனகசெழுங் கனிவாய் முத்தந் தருகவே. (க)

எண்ணிற்பொலிபல் புலவர்குழாத் தெய்திநம் மோடி
யாமொருவே, மென்முககூறி பெம்பெருமானிருந் தாய்தரு
நன்னய முடைத்தாய்,—மண்ணிற் பொலிபு கயிலாய வரை
க்கணிவர்ந்தம் மாதேவன், வடிகாதகம்புக் குள்ளுறுக்கும் வ
ளமை யுடைத்தாய் வளத்தருவாழ்,—விண்ணிற் பொலிவார்
களும்வியப்ப வெள்ளென் பழத்திற் குயிருளி, வெங்கராக்
கொண்டதுமீட்கு மிக்கவிறலிற்றுயெங்கள்.—கண்ணிற்பொ
லி செந்தமிழ்மணக்குங் கனிவாய்முத்தந் தருகவே, கனகக்
குன்றை யனகசெழுங் கனிவாய்முத்தந் தருகவே. (௨)

சொல்லும் பொருளு நனிசிறப்பச் சுருங்கச் சொல்லன் முதலாய,*தோட்டியமைய வமங்கலமாஞ் சொற்கள்புணரா துறக்களைந்து,—வெல்லுந் தகைய முரண்காட்டி விலக்கு விலக விதிதழுவி, விரும்புமூல விலக்கியமே வேறுகாதென் றுலகேத்த,—வல்லும்பகலு மம்பலவ ரருடற்காய வரும்பணி செய், தருள்பெற் றுய்ந்த வடியார்த மருமை பெருமை பாராட்டிக்,—கல்லுங்கரையக்கவிபாடுங் கனிவாய்முத்தந் தருகவே, கனகக்குன்றை யனகசெழுங்கனிவாய்முத்தந் தருகவே.

எண்ணியிது செய்திடினிதனு லெய்தப் படுவதிஃதெய்தா, திரியப்படுவதிஃதுண்மையெய்தப்படலாற்பயனின்றே,—நண்ணியவதை மறந்தொழிக நள்ளார் முனையே யிப்பொழுது, நயந்து படர்ந்து பொருதுவமே னமதே யாகு நகுவாகை,—தண்ணி மயம்போற் புகழ்ப்போர்வை தாங்கற்காய கருமமிது, தப்பா தாற்றப் பொருள்வருவாய் தவாதுண்டாமென் றிவைமுதலாரங்,—கண்ணிவளர்வக் குவைத்தருள்செய் கனிவாய் முத்தந் தருகவே, கனகக்குன்றை யனகசெழுங் கனிவாய் முத்தந் தருகவே. (௪)

நிலஞ்சார் தெய்வக் கற்பகமே நிமல ஞானவா ரிதியே, நீடுஞ் சைவப் பெருவாழ்வே நிலவா நின்ற குணக்குன்றே,—வலஞ்சார் பெரு நாவல ரேறே மாறுவருட்சிந் தாமணியே, மதிப்பார் மதியுளெழுஞ் சுடரே வாழ்த்துவார்தம் பெரும் பேறே,—புலஞ்சார்பத்தி விளைநிலமே போக்குவரவில் பூரணமே, புந்திக் கினிக்குஞ் சுவையமுதே போற்றி யி

* தோட்டி=அழகு.

ளிமே லொருதாயர்.—கலஞ்சார் முலைப்பா லருந்தாத கனி வாய் முத்தந் தருகவே, சனகக்குன்றை யனகசெழுங் கனி வாய் முத்தந் தருகவே. (௫)

வேறு.

நூலாறு தேர்ந்தவ ருஞற்றுமக்குண்டங்க ளொக்கியழ ல்பாயமேய, நுவல்புலவ ருதாகுண் டத்திற் சருப்பாயநோ ன்மைசான் மேக மெல்லாஞ்,—சாலாறு பாயவலையெரியுதகி பாயத் தவாதருவி வரைகள்பாயத், தையலார் குரிசிலார் மே ற்சம்ப ராரிபொழி சரமெலாம் பாயமலரிற்,—காலாறு பாய வம் மலர்மதுப்பாயக் கமழ்ந்த பட்டத்தினின்றுங், கற்பங்க ழூந்தொடிய வாளைபாயப் பொய்கை கருமேதி பாயமிக்கு ப்,—பாலாறு காலாறு பாய்தொண்டை நன்னாட பவள்வா ய் முத்த மருளே, பாவுசீ ருலகெலாம் விரவுசேவையர்பிரா ன் பவளவாய் முத்தமருளே. (௬)

மேயபல வாரியர்குழாத்தினுட்பூரியர்விராயதெனவாய தூய, வெள்ளோதி மக்குழா நிலைகுலையமேதிகால் விசைத் தெழீஇப்பாய வாங்கண்,—ஞயவெடி வாளையோர் பருகிலாங் கவிமோத வதினுதிர் பழத்தின் வெருவி, யம்மேதிகரையேற வதுகண்ட வவ்வாளை யாய*வா லாமைதீரத்,—தூயநெடு வா னீர் துளைந்தாடிமீளிற் றொடக்குநீங்காமை யெண்ணிச்,சோ திமதி மண்டலங் கீண்டமுத தாரையொடுதுளையக்கிழக்கிற ங்கும்,—பாயதடமலியுந் திருத்தொண்டை நன்னாட பவள வாய் முத்தமருளே, பாவுசீ ருல கெலாம் விரவுசே வையர் பிரான் பவளவாய் முத்தமருளே. (௭)

---

* வாலாமை=அசுத்தம்,

மிக்குவரு வெள்ளத்தெதிர்ந்தேறுபருவரால்வேகத்துரு
ண்டு போதும்,வேழத்தைமுட்டுபு வெகுண்டுவெடி கொண்
டெழாய் விண்ணாந்துளைத்துவிரைவிற்,—புக்குமகிழ்மழவிளங்
கன்றது தெறித்தெழீஇப் போயதெங்கென்றுநாடும், புந்திப்
பெருங்காம தேனுவின் மடித்தலப் பொம்மல்குழை வெய்த
முட்டத்,—திக்குநிக ழப்பசுப் பொழிகின்ற பால்வரால் செ
ய்தபுழை யூடிறங்கித் திசைகளை யெறிந்துவருகுடிஞைக்கு
முன்புதான் செய்த பெயரைப்புதுக்கும்,—பக்குநவி லருவ
ளம் படுதொண்டை நன்னாட பவளவாய்முத்தமருளே,பரவு
சீ ருலகெலாம் விரவுசே வையர்பிரான் பவளவாய் முத்த
மருளே. (௯)

வீங்குகரு மேதியினர் படுகட மருப்பினுல் விடுபடாக்
கடுவேலிவாய், வீடாநீக்கி யுட்புகூஉ மென்கரும்பினைமென்று
மென்றுதின்றிட வழிதரா,-வாங்குநிகழ் சாறப் படப்பையை
நிரப்பிமே லரம்பையந் துடவைமோதி, யாறுகி நெற்போ
ரடங்கச் சுமந்துசென் றலையாழி யிற்கலந்து,—தேங்குதிடர்
செய்துவரு மாற்றியந் தமிழ்வாய்ச் செறிந்துவர லாலி
னிமையாய்த், திகழ்கின்ற தென்றெண்ணி யாடுநர்க ளுண்
டுமகிழ் தேக்கவென் றுளுஞ்செயும்,—பாங்குபடு செல்வமெ
ன் பாற்றொண்டை நன்னாட பவளவாய் முத்தமருளே, பரவு
சீருலகெலாம் விரவுசே வையர்பிரான் பவளவாய் முத்த
மருளே. (௰)

